THANZEEL ACADEMY
FOR ISLAMIC STUDIES

தன்ஸீல் அகடமி
தஃவாப் பிரிவு

02

# தவ்ஹீத், ஃபிக்ஹ்

# التوحيد والفقه

தமிழ் மொழி
اللغة التاميلية

இரண்டாம் ஆரம்ப நிலை வகுப்பு
الصف الثاني الابتدائي

ஹி 1428 - 1429

| | |
|---|---|
| **நூல்** | : அகீதா, ஃபிக்ஹ் - இரண்டாம் ஆரம்ப நிலை வகுப்பு. |
| **தொகுப்பு** | : கல்வி அமைச்சு, சவூதி அரேபியா. |
| **பக்கங்கள்** | : 67 |
| **மூல மொழி** | : அரபு. |
| **மொழியாக்கம்** | : ஹிஸ்புல்லாஹ் (அன்வாரி). |
| **வடிவமைப்பு** | : தன்ஸீல் அகடமி. |
| **வெளியீடு** | : தன்ஸீல் அகடமியின் தஃபாப் பிரிவு. |
| **ஈமெயில்** | : thanzeeledu@gmail.com |

THANZEEL ACADEMY
FOR ISLAMIC STUDIES

**தன்ஸீல் அகடமி** வாட்சப் மற்றும்
டெலிகிராம் செனல்களில்
இணைவதற்கு **Scan** அல்லது
**Click** செய்யவும்.

**Whatsapp** **Telegram**

# முன்னுரை

எழுதக் கற்றுத் தந்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரித்தானது. அவன் மனிதர்களுக்கு அவர்கள் அறியாத அனைத்தையும் கற்றுக்கொடுத்துள்ளான். அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் > அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளும், ஈடேற்றமும் என்றென்றும் உண்டாவதாக. அவர்கள் மக்களை அறியாமை எனும் இருளிலிருந்து கல்வி எனும் வெளிச்சத்திற்கு வழிகாட்டியவர்கள்.

அகீதா என்பது அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒரு பகுதியாகும். இதில் அல்லாஹ்வைப் பற்றியும், ஈமான் கொள்ள வேண்டிய ஆறு அம்சங்கள் பற்றியும் ஒருவர் கற்றுக்கொள்வார். இதுவே தலை சிறந்த அறிவாகும். இதைக் கற்பதால் மாத்திரமே ஒருவரின் நற்செயல்களுக்கான கூலிகள் கிடைப்பதும், நற்செயல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அமைந்துள்ளது. ஒருவர் மனநிம்மதியுடனும், சந்தோசத்தோடும் வாழ்வதற்கு இவ் அறிவு அவசியமாகிறது. அவ்வாறே மார்க்க சட்டங்கள் பற்றி கற்றுக்கொள்வதும் தலையாய கடமையாகும். இதன் மூலம் வணக்கங்களை எவ்வாறு சரிவர நிறைவேற்றுவது எனும் அறிவு ஒருவருக்குக் கிடைக்கிறது. நபி > அவர்கள் கூறினார்கள், "அல்லாஹ் யாருக்கு நலவை நாடுகிறானோ அவருக்கு மார்க்கத்தின் விளக்கத்தை வழங்குவான்"[1] . இதனாலே தன்ஸீல் அகடமி சவூதி அரேபியாவின் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பாடப்புத்தகங்களை தமிழில் மொழியாக்கம் செய்வதற்கு முனைந்தது. இதன் மூலம் ஒரு மாணவர் சிறந்த ஒழுக்கமுள்ளவராகவும், வணக்கங்களை சரிவர நிறைவேற்றும் அடியாராகவும் மாறுவார்.

இப்புத்தகத்தில் அகீதா பாடப்பரப்பில் முதலாம் ஆரம்ப நிலை வகுப்பில் கற்ற இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகள் பற்றிய சிறய விளக்கங்கள் இப்பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறே பிக்ஹ் பாடப்பரப்பில் முதலாம் ஆரம்ப நிலை வகுப்பில் கற்ற சுத்தம், தொழுகை ஆகிய பாடங்களில் சிறிய விளக்கங்கள் இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ன.

இப்பாடங்கள் அனைத்தும் படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எளிய வசன நடையில் தொகுப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடம் முடியும் போதும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்களும் இதில் கூறப்படுள்ளன.

---

1 புஹாரி 07.

## ஆசிரியர்களுக்கான சில ஆலோசனைகள்:

1. உளத்தூய்மையுடன் செயற்படுவது நற்செயல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனையாகும். எனவே மாணவர்களுக்கு கற்பிக்கும் போது உளத்தூய்மையுடன் செயற்பட வேண்டும்.

2. மாணவர்கள் என்போர் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமானிதமாகும். மாணவர்களின் உள்ளங்களில் விதைக்கும் அறிவும் அமானிதமாகும். எனவே சரியான அறிவை அவர்களுக்கு போதித்து அமானிதத்தை காக்க வேண்டும்.

3. அகீதா பாடம் என்பது செயல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான வழிகாட்டலாகும். எனவே அதைக் கற்றுக்கொடுப்பதில் மிகவும் கவனத்தை கையாள வேண்டும்.

4. எம்மைச் சுற்றி நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தும் அடையாளங்களாகும். மழை பெய்தல், மின்வெட்டுதல், சூரியன் உதித்தல் மறைதல் போன்ற அனைத்தையும் சிறந்த உதாரணங்களாக காட்டி, மாணவர்கள் உள்ளத்தில் ஓரிறைக் கொள்கையை விதைக்க வேண்டும்.

5. ஃபிக்ஹ் பாடம் என்பது அல்லாஹ் சரியான முறையில் அறிந்த பின், அவன் கூறிய அடிப்படையில் அவனை எவ்வாறு வணங்க வேண்டும் என்பதைப் போதிக்கிறது. சுத்தமாக இருத்தல், வுழுசெய்தல், தொழுதல் என்பவற்றை சரிவர மாணவர்களுக்கு போதிக்க வேண்டும்.

6. இப்பாடங்களை மேலும் சிறந்த முறையில் நடாத்துவதற்கு ஒவ்வொரு தலைப்பையும் நடைமுறையோடு ஒப்பிட்டுக் கூற வேண்டும். அப்போதே மாணவர்கள் இப்பாடங்களை ஆர்வமாக கற்றுக்கொள்வார்கள்.

நபி > அவர்கள் கூறினார்கள், "ஒரு முஃமினான அடியான் தனது மரணத்திற்குப் பிறகும் தனது செயல்களுக்கும், நற்கருமங்களுக்கும் நன்மையைப் பெறவேண்டுமாக இருந்தால் தான் கற்ற அறிவை பிறருக்கும் பகிர வேண்டும்."[1]

1 இப்னுமாஜா 242

بسم الله الرحمن الرحيم

# உள்ளடக்கம்

அகீதா பாடப்பரப்பு


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| பாடம் 01 : | முதலாம் வகுப்பில் கற்றவற்றின் சுருக்கம். | 09 |
| பாடம் 02 : | மூன்று அடிப்படைகள். | 10 |
| பாடம் 03 : | முதலாம் அடிப்படை: அல்லாஹ்வை அறிதல். | 12 |
| பாடம் 04 : | மனிதர்களும், ஜின்களும் படைக்கப்பட்டதன் நோக்கம். | 15 |
| பாடம் 05 : | அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதன் அவசியம் | 18 |
| பாடம் 06 : | அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குவது ஷிர்க்காகும். | 20 |
| பாடம் 07 : | இரண்டாம் அடிப்படை: மார்க்கத்தை அறிதல். மார்க்கத்தின் படித்தரங்கள்: முதலாம் படித்தரம் - இஸ்லாம். | 22 |
| பாடம் 08 : | இஸ்லாத்தின் ருக்குன்கள். | 25 |
| பாடம் 09 : | இரு கலிமாக்களின் பொருள்கள். | 27 |
| பாடம் 10 : | இரண்டாம் படித்தரம் - ஈமான். | 30 |
| பாடம் 11: | மரணித்த பின் மீளெழுதல் பற்றிய நம்பிக்கை. | 32 |
| பாடம் 12: | மூன்றாம் படித்தரம் - இஹ்ஸான். | 34 |
| பாடம் 13: | மூன்றாம் அடிப்படை: முஹம்மத் > அவர்களை அறிதல். | 36 |

ஃபிக்ஹ் பாடப்பரப்பு


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| பாடம் 01 : | முதலாம் வகுப்பில் கற்றவற்றின் சுருக்கம். | 40 |
| பாடம் 02 : | இஸ்தின்ஜா, இஸ்திஜ்மார். | 41 |
| பாடம் 03 : | வுழூ செய்யும் முறை. | 44 |
| பாடம் 04 : | வுழுவை முறிப்பவை. | 48 |
| பாடம் 05 : | தொழுகையை ஆரம்பிக்கும் துஆ. | 50 |
| பாடம் 06 : | கடமையான தொழுகைகள். | 52 |
| பாடம் 07 : | தஷஹ்ஹுத். | 55 |
| பாடம் 08 : | நபி > மீது ஸலவாத்து சொல்லுதல். | 58 |
| பாடம் 09 : | ஸலவாத்தின் பின் ஓதவேண்டியவை. | 60 |
| பாடம் 10 : | தொழும் முறை. | 62 |
| பாடம் 11: | தொழுகையை முறிப்பவை. | 66 |

# தவ்ஹீத்

## பாடம் 01

# முதலாம் வகுப்பில் கற்றவற்றின் சுருக்கம்

1. உனது இறைவன் யார்?

2. அல்லாஹ் எங்கு இருக்கிறான்?

3. உன்னைப் படைத்து, உனக்கு உணவளிப்பது யார்?

4. அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்தான் அனைத்துப் பொருட்களையும் படைப்பவன்." (அல்குர்ஆன் 39:62)

   அல்லாஹ்வின் படைப்புகளில் மூன்றைக் கூறுக.

   01 | 02 | 03

5. மழையை இறக்குவது யார்?

6. முஹம்மத் > அவர்கள் யாருக்கு நபியாக அனுப்பப்பட்டார்கள்?

7. பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

   (முஹம்மத் >, இஸ்லாம், நரகம், அல்லாஹ், சுவனம், அல்குர்ஆன்)

   அ. நோய் ஏற்பட்டால் என்னைக் குணப்படுத்துபவன் ..........................................

   ஆ. எனது மார்க்கம் ..........................................

   இ. எனது நபி ..........................................

   ஈ. முஹம்மத் அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய வேதம் ..........................................

   உ. நபிக்கு கட்டுப்பட்டவர் .......................................... நுழைவார். அவருக்கு கட்டுப்படாதவர் .......................................... நுழைவார்.

# பாடம் 02

# மூன்று அடிப்படைகள்

**பாடத்தின் நோக்கம்:**

1. இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகளையும் மாணவர் அறிந்திருத்தல்.
2. மூன்று அடிப்படைகளுக்குமான ஆதாரங்களை மாணவர் அறிந்திருத்தல்.
3. இஸ்லாம் மார்க்கத்தை கண்ணியப்படுத்தல்.

## ஒருவர் அறிந்திருக்க வேண்டிய இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகள்

**01** அல்லாஹ்வை அறிதல்

**02** மார்க்கத்தை அறிதல்

**03** நபியை அறிதல்

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

**யார் அல்லாஹ்வை இறைவனாகவும் இஸ்லாத்தை மார்க்கமாகவும் முஹம்மத் ﷺ அவர்களை இறைத்தூதராகவும் மன நிறைவோடு ஏற்றுக்கொண்டாரோ அவர் இறை நம்பிக்கையின் சுவையை அடைந்துவிட்டார்.**

-முஸ்லிம் 34-

# கலந்துரையாடல்

**1** பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

மனிதன் அவசியம் அறிய வேண்டிய மூன்று அடிப்படைகள்:

1.............................................. 2.............................................. 3..............................................

**2** மனிதன் அவசியம் அறிய வேண்டிய மூன்று அடிப்படைகளுக்கான ஆதாரங்கள் எவை?

**கப்றில் கேட்கப்படும் மூன்று கேள்விகள்:**

- உனது இறைவன் யார்?
- உனது மார்க்கம் என்ன?
- உனது நபி யார்?

## ஆசிரியருக்கு

- அஷ்ஷேக் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் : அவர்கள் பற்றியும், அவரது தஃவா பற்றியும் எளிய முறையில் மாணவர்களுக்கு கூறவும். மேலதிக தகவல்களுக்கு கலாநிதி முஹம்மத் இப்னு ஸஃத் அஷ்ஷுவைஇர் அவர்கள் எழுதிய "தஸ்ஹீஹு ஹதஃ தாரிஹீ ஹவ்லல் வஹ்ஹாபிய்யா" எனும் நூலைப் பார்வையிடவும்.
- அடிப்படை என்பதன் அர்த்தத்தை மாணவர்களுக்கு புரியவைக்கவும்.
- இம்மூன்று அடிப்படைகள் பற்றி கப்றில் கேள்வி கேட்கப்படும் என்பதை மாணவர்களுக்கு கூறவும். இது பற்றி அபூதாவுத் 4753ல் இடம்பெற்றுள்ள பர்ராஉ இப்னு அல்ஆஸிப் Ó அவர்கள் அறிவிக்கும் ஹதீஸை மாணவர்களுக்கு விளக்கவும்.

# பாடம் 03

# முதலாம் அடிப்படை: அல்லாஹ்வை அறிதல்

**பாடத்தின் நோக்கம்:**

1. இஸ்லாத்தின் மூன்று படித்தரங்களில் முதலாம் படித்தரத்தை மாணவர் அறிதல்.
2. இரட்சகன் (رَبٌّ) என்பதன் பொருளை மாணவர் அறிதல்.
3. அல்லாஹ்வின் படைப்புகள் எவை என்பதை மாணவர் இணங்கானல்.




எனது இறைவன் அல்லாஹ்

**அவன் படைப்பாளன், உணவளிப்பவன், அனைத்தையும் கண்காணிப்பவன்.**

**வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை.**

இரவு, பகல், சூரியன், சந்திரன், வானங்கள், பூமி ஆகிய படைப்புகளின் அற்புதங்களைக் கொண்டு எனது இறைவனை நான் அறிகிறேன்.






அல்லாஹ் கூறுகிறான்,

“இரவும், பகலும் சூரியனும், சந்திரனும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவைதாம். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வையே வணங்குகிறவர்களாக இருந்தால் சூரியனுக்கும், சந்திரனுக்கும் ஸுஜூது செய்யாதீர்கள் - இவற்றைப் படைத்தவனாகிய அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்யுங்கள்.”

-அல்குர்ஆன் 41:37-

# கலந்துரையாடல்

1. இரட்சகன் (رَبٌّ) என்பதன் அர்த்தம் யாது?

2. பின்வரும் இடைவெளியை நிரப்புக.

   1. எனது இரட்சகனை ..........................................., .......................................... மூலம் நான் அறிகிறேன்.
   2. இரவையும், பகலையும் படைத்தவன் ..........................................

3. கீழுள்ள படத்தில் அல்லாஹ்வின் படைப்புகள் மூன்றைக் குறிப்பிடுக.



1. ..........................................
2. ..........................................
3. ..........................................

4 பின்வரும் அல்குர்ஆன் வசனத்தில் இடம்பெற்றுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகளின் கீழ் கோடிடுக.

"நிச்சயமாக அல்லாஹ்தான் இரவைப் பகலில் புகுத்துகிறான்; பகலை இரவில் புகுத்துகிறான்; இன்னும் சூரியனையும், சந்திரனையும் வசப்படுத்தினான்" என்பதை நீர் பார்க்கவில்லையா? ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தவணைவரை செல்கின்றன அன்றியும் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள செய்பவற்றை நன்கறிபவன்." -அல்குர்ஆன் 31:29-

5 சூரியனும், சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவையாகும். அவை ஒவ்வொன்றினதும் பயனைக் குறிப்பிடுக.

சூரியன்: ..............................................................................................................

சந்திரன்: ..............................................................................................................

நான் ஒரு முஸ்லிம்.
அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் என நம்புகிறேன்.
அனைத்திற்கும் உணவளிப்பவன் அல்லாஹ் என நம்புகிறேன்.
இப்பிரபஞ்சத்தை இயக்குபவன் அல்லாஹ் என நம்புகிறேன்.
வணக்கத்திற்குத் தகுதியானவன் அவன் மாத்திரம் என நம்புகிறேன்.

## ஆசிரியருக்கு

- மாணவர்கள் அல்லாஹ்வின் படைப்புகளைப் பற்றி சிந்திக்கும் வகையில் இப்பாடத்தை வகுப்பிற்கு வெளியில் நடாத்தவும். அல்லாஹ்வின் படைப்புகள் பற்றிய அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்களை மாணவர்களுக்குக் கூறவும்.
- அல்லாஹ் கூறுகிறான், "மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் தக்வா (இறையச்சமும், தூய்மையும்) உடையோராகளாம்.அ(ந்த இறை)வனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்திலிருந்தும் மழை பொழியச்செய்து, அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான்; (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்." -அல்குர்ஆன் 02:21-22-
- அல்லாஹ்வின் படைப்புகளைப் பற்றி சிந்திப்பதும் வணக்கம் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- பயனுள்ள அறிவு, ஹலாலான அருட்கொடை போன்ற செழிப்பான விடயங்களையும், நோய்கள், துன்பங்கள் போன்ற கஷ்டமான விடயங்களிலிருந்து பாதுகாப்பையும் அல்லாஹ்விடம் கேட்டுப் பெறுமாறு மாணவர்களுக்கு அறிவிருத்தவும்.
- அல்லாஹ் எமக்கு அருளாக தந்துள்ள அவனின் படைப்புகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்துமாறு மாணவர்களுக்கு வழிகாட்டவும்.

# பாடம் 04

# மனிதர்களும், ஜின்களும் படைக்கப்பட்டதன் நோக்கம்

**பாடத்தின் நோக்கம்:**

1. மனிதர்களும், ஜின்களும் படைக்கப்பட்டதன் நோக்கத்தை மாணவர் அறிதல்.
2. இந்நோக்கத்திற்கான ஆதாரத்தை மாணவர் அறிதல்.
3. வணக்கம் என்பதன் அர்த்தத்தை மாணவர் அறிதல்.
4. சில வணக்கங்களை இனங்கான மாணவர்கள் பயிற்றப்படல்.

**தன்னை வணங்க வேண்டுமென**

மனிதர்களையும், ஜின்களையும் அல்லாஹ் படைத்தான்.

அல்லாஹ் கூறுகிறான்,
"ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காவே படைத்தேன்."
-அல்குர்ஆன் 51:56-

**வணக்கம்:**

சொல்லக்கூடியவைகள், மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செய்யக்கூடியவைகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கு விருப்பமாகவும், அவனின் திருப்பொருத்தத்தையும் பெற்றுத் தந்தால் அவை யாவும் வணக்கமாகும்.

**சில வணக்கங்கள்:**

அல்லாஹ்வை நேசித்தல், அவனுக்கு பயப்படுதல், அவனிடம் துஆ கேட்டல், தொழுதல், நோன்பு பிடித்தல், பெற்றோருக்கு பணிவிடை செய்தல்...

# கலந்துரையாடல்

1. ஓர் உயர்ந்த நோக்கத்திற்காகவே அல்லாஹ் உன்னை படைத்துள்ளான். அதை ஆதாரத்துடன் கூறுக.

2. பின்வரும் இடைவெளியை நிரப்புக.

- வணக்கம்: ................................................................, ................................................................, வெளிப்படையாகவும் ................................................................ அனைத்தும் அல்லாஹ்வுக்கு விருப்பமாகவும், அவனின் திருப்பொருத்தத்தையும் பெற்றுத் தந்தால் அவை யாவும் வணக்கமாகும்.

- சில வணக்கங்கள்: ................................................................, ................................................................, ................................................................

3. அல்லாஹ் கூறுகிறான், "ஆணாயினும், பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற் செயல்களைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம்; "
-அல்குர்ஆன் 16:97-

எதன் மூலம் தூய வாழ்க்கையை நீ பெற்றுக்கொள்வாய்?

**உள்ளம் விரிவடைவதற்கும், அமைதியடைவதற்கும் வணக்கம் மிக முக்கிய காரணமாகும்.**

## ஆசிரியருக்கு

- அல்லாஹ் படைத்த அல்லது உருவாகுமாறு ஏவிய படைப்புகள் ஒவ்வொன்றும் ஓர் உயரிய நோக்கத்திற்காகவே அவனால் படைக்கப்பட்டுள்ளன என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும். அவைகளில் மனிதர்களும் வீணாக படைக்கப்படவில்லை. அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டும் எனும் உயரிய நோக்கத்திற்காகவே அவர்களும் படைக்கப்பட்டுள்ளனர். அல்லாஹ் கூறுகிறான், ""நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?" (என்றும் இறைவன் கேட்பான்.)" -அல்குர்ஆன் 23:115-
- மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் செய்யும் வணக்கங்களுக்கு மேலும் பல உதாரணங்களை மாணவர்களுக்கு கூறவும். வெளிப்படையாக உடல் உறுப்புகளால் செய்யும் வணக்கங்கள்: ஸகாத், ஹஜ், குர்பானி... மறைமுகமாக உள்ளத்தால் செய்யும் வணக்கங்கள்: அல்லாஹ் மீது நேசம் வைத்தல், அவனின் தண்டனைகளுக்குப் பயப்படுதல், அவனிடம் வெகுமதிகளை எதிர்பார்த்தல்...
- வணக்கங்களில் ஈடுபடுவது உள்ளத்தை அமைதிபடுத்தும் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும். அல்லாஹ் கூறுகிறான், "ஆணாயினும், பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற் செயல்களைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம்; இன்னும் (மறுமையில்) அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம்." -அல்குர்ஆன் 16:97-

# பாடம் 05

# அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதன் அவசியம்

**பாடத்தின் நோக்கம்:**

1. ஏகத்துவத்தின் மகத்துவத்தை மாணவர் அறிதல்.
2. அல்லாஹ்வை ஒருமைப்படுத்தலுக்கு எதிரான அல்லாஹ்வுக்கு இணைவைத்தலின் விபரீதத்தை மாணவர் அறிதல்.
3. வணக்கத்தின் மூலம் அல்லாஹ்வை ஒருமைப்படுத்த வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை மாணவர் அறிதல்.

அல்லாஹ் ஏவிய முக்கியமான விடயம்

**ஏகத்துவமாகும்.**

அது அவனை மாத்திரம் வணங்குவதாகும்.

அல்லாஹ் தடுத்த முக்கியமான விடயம்

**ஷிர்க்காகும்.**

அது அவன் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வணங்குவதாகும்.

அல்லாஹ் கூறுகிறான்,

"அல்லாஹ் - (ஒருவனையே) வணங்க வேண்டும்; அவனுக்கு (எதனையும், எவரையும்) இணைவைக்கக் கூடாது; நான் (உங்களை) அவன் பக்கமே அழைக்கின்றேன்; அவன் பாலே (என்) மீட்சியும் இருக்கிறது" என்று (நபியே!) நீர் கூறுவீராக.."

-அல்குர்ஆன் 13:36-

# கலந்துரையாடல்

1. அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குவது எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

2. பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

   1. அல்லாஹ் ஏவிய முக்கியமான விடயம் ..........
   2. அல்லாஹ் தடுத்த முக்கியமான விடயம் ..........
   3. ஏகத்துவம் என்பது .......... மறுவுலகிலும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான வழியாகும்.
   4. இணைவைத்தல் என்பது இவ்வுலகில் துர்ப்பாக்கியத்தையும், .......... வேதனையையும் பெற்றுத்தரும்.

3. அல்லாஹ்வை மாத்திரம் அவசியம் வணங்க வேண்டும் என்பதற்கான ஆதாரத்தைக் குறிப்பிடுக.

**ஏகத்துவம் என்பது இவ்வுலகிலும், மறுவுலகிலும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான வழியாகும்.**

## ஆசிரியருக்கு

- அனைத்து நபிமார்களும் அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டுமெனவும், அவனுக்கு இணைவைக்கக்கூடாது எனவும் போதிக்கவே அனுப்பட்டார்கள் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும். சூறதுல் அஃராஃபிலும், ஏனைய சூறாக்களிலும் இது பற்றிய நபிமார்களின் சம்பவங்களை மாணவர்களுக்கு கூறவும்.
- ஏகத்துவம் என்பது இம்மையிலும், மறுமையிலும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான வழி என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- இணைவைப்பு என்பது இவ்வுலகில் துர்ப்பாக்கியத்தையும், மறுமையில் வேதனையையும் பெற்றுத் தரும் என்பதை தெளிவுபடுத்தவும். இதனாலே இப்றாஹீம் அவர்கள் இவ்வாறு பிரார்த்தித்தார்கள், "என்னையும், என் மக்களையும் சிலைகளை நாங்கள் வணங்குவதிலிருந்து காப்பாற்றுவாயாக!" - அல்குர்ஆன் 14:35-
- இணைவைத்தலுக்கான சில உதாரணங்களைக் குறிப்பிடவும். உ+ம்: அல்லாஹ் அல்லாதவருக்காக குர்பானி கொடுத்தல், அல்லாஹ் அல்லாதவர் மீது சத்தியம் செய்தல், மந்திரித்த கயிறுகளை கட்டிக்கொள்ளல்...

# பாடம் 06

# அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குவது ஷிர்க் ஆகும்

**பாடத்தின் நோக்கம்:**

1. ஷிர்க் என்றால் என்னவென்று மாணவர் அறிதல்.
2. ஷிர்க்கில் வீள்வதிலிருந்து மாணவர் எச்சரிக்கையாக இருத்தல்.
3. ஏதாவது ஒரு வணக்கத்தை அல்லாஹ் அல்லாதவருக்கு செலுத்துவதன் சட்டத்தை மாணவர் அறிதல்.
4. அல்லாஹ் அல்லாதவரை வணங்குவது ஷிர்க் ஆகும் என்பதற்கான ஆதாரத்தை மாணவர் அறிதல்.




அல்லாஹ் கூறுகிறான்,

**"மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள்;. அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள்."**

-அல்குர்ஆன் 04:36-

## கலந்துரையாடல்

**1** அல்லாஹ் அல்லாதவரை வணங்குவோர் முஷ்ரிக்குகளாவர்.

1. இதற்கான ஆதாரத்தைக் கூறுக.
2. இதற்கான உதாரணத்தைக் கூறுக.

2 பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

1. நிரந்தரமாக .................................... இருப்பது இணைவைப்போருக்கான தண்டனையாகும்.

2. ஏதாவது ஒரு வணக்கத்தை அல்லாஹ் அல்லாதவருக்கு செலுத்துபவர் முஷ்ரிக் ஆவார். உ+ம்: ...................................................................................................., அல்லாஹ் அல்லாதவரிடம் பிரார்த்தித்தல்.

3 மக்களை இணைவைப்பில் தள்ள வேண்டுமென ஷைத்தான் ஏன் ஆசைப்படுகிறான்?

## ஷிர்க்

**இவ்வுலகிலும், மறுவுலகிலும் துர்ப்பாக்கியத்தைப் பெற்றுத் தரும்.**

### ஆசிரியருக்கு

- ஒருவர் எவ்வளவு தொழுதும், நோன்பு பிடித்தும், ஹஜ் செய்தும், உம்ரா செய்தும் பிரார்த்தனை, குர்பானி, ஸுஜூது போன்ற வணக்கங்களை அல்லாஹ் அல்லாதவருக்கு செய்தால் அவர் முஷ்ரிக் ஆவார். அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிட்டார் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- நபி அவர்கள் காலத்திலும் பல இணைவைப்பாளர்கள் தமது அனைத்து வணக்கங்களையும் அல்லாஹ்வுக்கு சமமாக வேறு கடவுள்களுக்கும் செய்தமையால் அவை அனைத்தும் அவர்களுக்கு பலனளிக்கவில்லை என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- இணைவைப்பிற்கான தண்டனை நிரந்தர நரகம் என்பதை மாணவர்களுக்கு கூறவும். அல்லாஹ் கூறுகிறான், "எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹறாமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை." -அல்குர்ஆன் 05:72-
- ஷைத்தான் எப்போதும் மனிதனுக்கு எதிரி என்பதையும், இணைவைப்பை செய்ய வைத்து தன்னுடன் நரகிற்கு கூட்டிச் செல்வான் என்பதையும் தெளிவுபடுத்தவும்.

# பாடம் 07

# இரண்டாம் அடிப்படை: மார்க்கத்தை அறிதல்

**பாடத்தின் நோக்கம்:**

1. இஸ்லாத்தின் அடிப்படைகளை மாணவர் அறிதல்.
2. இஸ்லாம் என்பதன் அர்த்தத்தை மாணவர் அறிதல்.
3. இஸ்லாமிய மார்க்கத்தின் மீது பற்றுள்ளவராக மாணவர் மாறுதல்.

## மூன்று அடிப்படைகள்

01 அல்லாஹ்வை அறிதல்

02. மார்க்கத்தை அறிதல்

03. நபியை அறிதல்

## மார்க்கத்தின் படித்தரங்கள்

01 இஸ்லாம்

02. ஈமான்

03. இஹ்ஸான்

# முதலாம் படித்தரம்: இஸ்லாம்

இஸ்லாம் என்பது அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அவனை மாத்திரம் வணங்கி, அவன் கூறியவற்றை மீறாமல், பாவம் செய்யாமல், இஸ்லாத்தை தவிர வேறு மார்க்கங்களை பின்பற்றாமல் இருப்பதாகும்.

நான் ஒரு முஸ்லிம். எனது மார்க்கம் இஸ்லாம்.
இஸ்லாத்தை நான் பெருமையாக நினைக்கிறேன்

## கலந்துரையாடல்

1 பொருத்தமானவற்றுடன் இணைக்குக.

| | |
|---|---|
| இஹ்ஸான் | இரண்டாம் படித்தரம் |
| ஈமான் | முதலாம் படித்தரம் |
| இஸ்லாம் | மூன்றாம் படித்தரம் |

2 கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

இஸ்லாம் என்பது அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, ........................................ , அவன் கூறியவற்றை மீறாமல், ........................................ ,, இஸ்லாத்தை தவிர வேறு மார்க்கங்களை ........................................ இருப்பதாகும்.

## ஆசிரியருக்கு

- இஸ்லாத்தின் மீதான நேசத்தையும், பற்றையும் மாணவர்களின் உள்ளங்களில் விதைக்கவும்.

- இஸ்லாம் மார்க்கம் சந்தோசத்தையும், மன அமைதியையும், விசாலமான உள்ளத்தையும் தரும் எனவும், இணைவைப்பானது வழிகேட்டையும், இறுகிய உள்ளத்தையும், சந்தோசமற்ற வாழ்வையும் வழங்கும் எனவும் மாணவர்களுக்கு போதிக்கவும். அல்லாஹ் கூறுகிறான், "எவர் என்னுடைய நேர்வழியைப் பின் பற்றி நடக்கிறாரோ அவர் வழி தவறவும் மாட்டார், நற்பேறிழக்கவும் மாட்டார்.எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும்." -அல்குர்ஆன் 20:124-

- இஸ்லாத்தை ஏற்றபின் சந்தோசத்தையும், மன நிம்மதியையும் உணரும் சிலரின் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட வரலாறுகளை மாணவர்களுக்குக் கூறவும்.



# பாடம் 08

# இஸ்லாத்தின் ருக்குன்கள்

**பாடத்தின் நோக்கம்:**

1. இஸ்லாத்தின் 05 ருக்குன்களையும் மாணவர் அறிதல்.
2. இவ் ருக்குன்களை செய்வதன், விடுவதன் சட்டங்களை மாணவர் அறிதல்.
3. தொழுகையின் முக்கியத்துவத்தையும், அதனை பேணுதலாக நிறைவேற்றுவது பற்றியும் மாணவர் அறிதல்.

## இஸ்லாத்தின் ருக்குன்கள் 05 ஆகும்.



01



**முதலாம் ருக்குன்**
لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَسُوْلُ اللّٰهِ
என்ற கலிமாவைக் கூறல்

02



**இரண்டாம் ருக்குன்**
தொழுதல்

03




**மூன்றாம் ருக்குன்**
ஸகாத் கொடுத்தல்

04



**நான்காம் ருக்குன்**
நோன்பு நோற்றல்

05



**ஐந்தாம் ருக்குன்**
வசதி படைத்தவர்கள் ஹஜ் செய்தல்

# கலந்துரையாடல்

1 இஸ்லாத்தின் ருக்குன்கள் எத்தனை?

2 இஸ்லாத்தின் ருக்குன்களின் கீழ் கோடிடுக.
(நோன்பு நோற்றல், பெற்றோருக்கு உபகாரம் செய்தல், வசதிபடைத்தவர்கள் ஹஜ் செய்தல், அல்குர்ஆன் ஓதுதல், தொழுகையை நிறைவேற்றல், கலிமா கூறுதல், ஸகாத் கொடுத்தல்)

3 இடைவெளியை நிரப்புக.
ஒரு அடியானிடம் செயல்கள் பற்றி மறுமையில் கேட்கப்படும் முதலாவது கேள்வி .................................................................. பற்றி ஆகும்.

**இஸ்லாத்தின் ஐந்து ருக்குன்களும் ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளன. சுவனத்தில் வெற்றி பெறுவதற்காக அவற்றை நிறைவேற்றுவது அவசியமாகும்.**

## ஆசிரியருக்கு

- அறையின் தூண்களை உதாரணம் காட்டி இஸ்லாத்தின் ருக்குன்களை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- இந்த ருக்குன்கள் அல்லாஹ்வால் கடமையாக்கப்பட்டுள்ளன என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும். நபி > அவர்கள் கூறினார்கள், "இஸ்லாம் ஐந்து தூண்கள் மீது எழுப்பப்பட்டுள்ளது, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதிமொழிவது, தொழுகையைக் கடைப்பிடிப்பது, (கடமையானோர்) ஸகாத் (கட்டாய தர்மம்) வழங்குவது, (இயன்றோர் இறையில்லம் கஅபாவில்) ஹஜ் செய்வது, ரமளானில் நோன்பு நோற்பது." -புஹாரி 08, முஸ்லிம் 16-
- தொழுகையை அதன் ஆரம்ப நேரத்தில் தொழுமாறு மாணவர்களுக்கு பயிற்றுவிக்கவும். இது பற்றியே ஒரு அடியான் மறுமையில் முதன் முதலில் கேள்விகேட்கப்படுவான் எனவும் கூறவும். நபி > அவர்கள் கூறினார்கள், "தனது செயல்கள் பற்றி முதன் மறுமையில் முதன் முதலில் கேட்கப்படுவது தொழுகை பற்றியதாகும். அது சீராகிவிட்டால் அவர் வெற்றிபெறுவார். அது சீர்கெட்டுவிட்டால் நஷ்டமடைவார்" -திர்மிதி 413-
- தொழுகையை விடுவது ஒருவரை இறைநிராகரிப்பில் விட்டுவிடும் என மாணவர்களை எச்சரிக்கவும். நபி > அவர்கள் கூறினார்கள், "எமக்கும் அவர்களுக்கும் (இறை மறுப்பாளர்களுக்கும்) இடையிலான ஒப்பந்தம் - உடன்படிக்கை – தொழுகையாகும். எனவே அதனை யார் விட்டு விடுகிறாரோ அவர் காஃபிராகி விட்டார்" -திர்மிதி 2621-

# பாடம் 09

# இரு கலிமாக்களின் பொருள்கள்

**பாடத்தின் நோக்கம்:**

1. لا إله إلا الله என்பதன் பொருளை மாணவர் அறிதல்.
2. محمد رسول الله என்பதன் பொருளை மாணவர் அறிதல்.
3. நபி > அவர்கள் மீது நேசம் கொண்டு, அவரைப் பின்பற்ற மாணவர் தயாராகுதல்.
4. நபி > அவர்களுக்கு மாறுசெய்வதிலிருந்து மாணவர் எச்சரிக்கையாக இருத்தல்.

## لَا إِلٰهَ إِلَّا اللهُ என்பதன் பொருள்

உண்மையில் வணங்கப்படுவதற்கு தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை.

## مُحَمَّدٌ رَسُوْلُ اللهِ என்பதன் பொருள்

- நபியவர்கள் ஏவியவைகளை பின்பற்றுதல்.
- அவர் கூறியவைகளை உண்மைப்படுத்தல்.
- அவர் தடுத்தவைகளை விட்டும் விலகியிருத்தல்
- கடமையாக்கப்பட்ட விதத்தில் அல்லாஹ்வை வணங்குதல்

# கலந்துரையாடல்

**1** பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

அ. நான் ஒரு முஸ்லிம்,

..............................................................................................................

என்றும்,

..............................................................................................................

எனவும் நான் சாட்சி கூறுகிறேன்.

ஆ. لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்பதன் அர்த்தம்:

..............................................................................................................

..............................................................................................................

இ. திக்ருகளில் சிறந்தது,

..............................................................................................................

என்பதாகும்.

**2** مُحَمَّدٌ رَسُوْلُ اللّٰهِ என்பதன் அர்த்தம் யாது?

**3** நபி > அவர்கள் செய்யுமாறு கூறிய மூன்று வணக்கங்களைக் குறிப்பிடவும்.

தொழுகையை நிறைவேற்றல்

..............................................................

..............................................................

..............................................................

**இரு கலிமாக்களையும் மொழிவதால் ஒருவர் இஸ்லாத்தினுள் நுழைகிறார்.**

## ஆசிரியருக்கு

- இவ்விரு கலிமாக்களையும் மொழிந்தே ஒருவர் இஸ்லாத்தில் நுழைய வேண்டும் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- கப்றுகளை வணங்குதல், கப்றில் அடக்கம் செய்யப்பட்டிருப்பவரிடம் உதவி கேட்டல், தனது நேர்ச்சையை நிறைவேற்றுமாறு அவர்களுக்காக குர்பானி கொடுத்தல் போன்ற பல தவறான வழிபாடுகளை மாணவர்களுக்கு உதாரணமாக கூறி, அவை அனைத்தும் அல்லாஹ் அல்லாதவர்களுக்காக செய்யப்படும் தவறான வணக்கங்கள் என்பதை புரியவைக்கவும்.
- (لَا إِلٰهَ إِلَّا اللهُ) என்ற கலிமாவை கூறுவது மாத்திரம் ஒருவருக்கு பயனளிக்காது. அதன் அர்த்தத்தை அறிந்திருக்க வேண்டும், அது கூறுவது போன்று செயற்பட வேண்டும், அதை முறிக்கும் காரியங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்பவற்றை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- (لَا إِلٰهَ إِلَّا اللهُ) என்பது திக்ருகளில் மிகவும் சிறந்ததாகும் என்பதை மாணவர்களுக்கு கூறவும். நபி > அவர்கள் கூறினார்கள், "இவ்வுலகில் யாருடைய கடைசி வார்த்தை (لَا إِلٰهَ إِلَّا اللهُ) என இருக்குமோ அவர் சுவனம் நுழைவார்" -அபூதாவுத் 3116-.
- (مُحَمَّدٌ رَسُوْلُ اللهِ) என்ற கலிமாவின் அர்த்தத்தை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்:
    - நபியவர்கள் ஏவியவைகளை பின்பற்றுதல்: இஸ்லாத்தின் கடமைகளையும், ருக்குன்களையும் நிறைவேற்றல். உ+ம்: தொழுகை.
    - அவர் கூறியவைகளை உண்மைப்படுத்தல்: உ+ம்: மறுமைநாள், சுவனம், நரகம்.
    - அவர் தடுத்தவைகளை விட்டும் விலகியிருத்தல்: பெரும்பாவங்கள், சிறுபாவங்கள்.
    - கடமையாக்கப்பட்ட விதத்தில் அல்லாஹ்வை வணங்குதல்: இஸ்லாம் காட்டித்தராத பித்அத்துக்களை விட்டும் தவிர்ந்திருத்தல். உ+ம்: மீலாத் விழா கொண்டாடுதல்.
- தவிர்ந்திருப்பதை விடவும், விலகி தூரமாயிருப்பது மிகவும் பூர்த்தியானது என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.

# பாடம் 10

# இரண்டாம் படித்தரம்: ஈமான்

**பாடத்தின் நோக்கம்:**

1. ஈமானின் 06 ருக்குன்களையும் மாணவர் அறிதல்.
2. இவ் ஆறு ருக்குன்களையும் அறிந்துகொள்வதன் சட்டத்தை மாணவர் அறிதல்.
3. ஈமான் என்பது எண்ணம், சொல், செயல் சார்ந்தவை என்பதை மாணவர் அறிதல்.




## கலந்துரையாடல்

1. ஈமானின் ருக்குன்கள் எத்தனை?
2. கீழுள்ள ருக்குன்களை வரிசைப்படுத்துக.

| | | |
|---|---|---|
| அல்லாஹ் | மறுமை | கலாகத்ர் |
| மலக்குகள் | நபிமார்கள் | வேதங்கள் |

3 அல்லாஹ் கூறுகிறான், "நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்றாஹீமுக்கும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்; "நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்' என்பதே" -அல்குர்ஆன் 42:13-

மேலும், "முஹம்மது அல்லாஹ்வின் தூதராகவே இருக்கின்றார்" -அல்குர்ஆன் 48:29-

மேலுள்ள இரு வசனங்களிலும் இடம்பெற்றுள்ள நபிமார்களின் பெயர்களை எழுதுக.

1.................................................... 2..............................................................

3.................................................... 4..............................................................

5....................................................

**ஈமானின் ஆறு ருக்குன்களையும் நம்பிக்கை கொள்வது இவ்வுலகிலும், மறுவுலகிலும் சந்தோசத்தைப் பெற்றுத் தரும்.**

## ஆசிரியருக்கு

- ஈமான் என்பது இவ் ஆறு விடயங்களையும் உள்ளத்தால் ஏற்று, நாவால் மொழிந்து, உடல் உறுப்புகளால் செயற்படுத்துவதைக் குறிக்கிறது என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- ஹதீஸ் ஜிப்ரீலை மாணவர்களுக்கு கற்பிக்கவும். (முஸ்லிம் 08).
- ஈமானின் ஆறு ருக்குன்களையும் நம்பிக்கை கொள்வது இவ்வுலகிலும், மறுவுலகிலும் சந்தோசத்தைப் பெற்றுத் தரும் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- ஈமானின் அடையாளங்கள்: அல்லாஹ் மீது நேசம் வைத்து, அவனுக்கு வழிபடுதல், தனிமையிலும், பொதுவெளியிலும் அவன் கண்காணிக்கிறான் என்பதை உணர்தல், அல்குர்ஆனை மனனம் செய்து, அது கூறுவது போன்று வாழ்தல், நற்செயல்களை செய்து மறுமைக்காக தயாராகுதல், அல்லாஹ் ஏற்படுத்தும் நலவுகளையும், கெடுதிகளையும் பொருந்திக்கொள்ளல் போன்றவைகள் என்பதை மாணவர்களுக்கு புரியவைக்கவும்.
- அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் இடம்பெற்றுள்ள மலக்குமார்கள், நபிமார்கள், வேதங்களின் பெயர்களை மாணவர்களுக்கு கூறவும்.
- ஏதும் ஏற்படும் போது 'அல்லாஹ்வின் நாட்டம் போல் நடந்துவிட்டது' எனும் வாசகத்தைக் கூறி, கலாகத்ர் மீதான நம்பிக்கையை வளர்க்க மாணவர்களை பயிற்றுவிக்கவும்.
- இவ் 06 ருக்குன்களையும் நம்பிக்கை கொள்ளாதவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறுவார் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.

# பாடம் 11

# மீளெழுதல் பற்றி நம்பிக்கை கொள்ளல்

**பாடத்தின் நோக்கம்:**

1. மீளெழுதல் என்பதன் அர்த்தத்தை மாணவர் அறிதல்.
2. மீளெழுதல்  பற்றிய நம்பிக்கையின் சட்டத்தை மாணவர் அறிதல்.
3. மீளெழுதலை மறுப்போரின் சட்டத்தை மாணவர் அறிதல்.

மீளெழுதல் பற்றிய நம்பிக்கை மறுமை நாளை நம்பிக்கை கொள்வதில் உள்ளடங்கும்.

## மீளெழுதல்

மனிதர்கள் அனைவரும் மரணித்த பின் மறுமையில் அவர்களை விசாரித்து, கூலி வழங்குவதற்காக கப்றுகளிலிருந்து அல்லாஹ் மீண்டும் எழுப்பாட்டுவான்.

**மீளெழுதல் பற்றி நம்பிக்கை கொள்வது கட்டாயமாகும்.**

அல்லாஹ் கூறுகிறான், "இப் பூமியிலிருந்து நாம் உங்களைப் படைத்தோம்; அதனுள்ளேயே நாம் உங்களை மீட்டுவோம்; இன்னும், அதிலிருந்தே நாம் உங்களை இரண்டாம் முறையாகவும் வெளிப்படுத்துவோம்."

-அல்குர்ஆன் 20:55-

**மீளெழுதலை மறுப்பவர் காஃபிராவார்.**

## கலந்துரையாடல்

1. மரணித்த பிறகு மனிதர்களை மீண்டும் எழுப்புபவன் யார்?

2. பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.
மீளெழுதலை நம்புவது ........................................ ஆகும். அதை மறுப்பவர் ................................................................. ஆவார்.

2 பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை பூரணப்படுத்துக.

"இப் பூமியிலிருந்து நாம் உங்களைப் படைத்தோம்; ................................................................................................................................................................................................................................................................................................................................................................"

யாருக்கு மறுமையில் வலது கையில் பதிவேடு கொடுக்கப்படுகிறதோ அவர் வெற்றி பெற்றவராவார். அவரது விசாரணையும் இலகுவாக இருக்கும். யாருக்கு பதிவேடு இடது கையில் கொடுக்கப்படுகிறதோ அவர் நஷ்டமடைந்தவராவார். அவரது விசாரணை கடுமையாக இருக்கும்.

## ஆசிரியருக்கு

- மறுமை நாளை நம்பிக்கை கொள்வதோடு சேர்த்து மீளெழுதல், விசாரணை, கூலி வழங்கப்படுதல் பற்றியும் நம்பிக்கை கொள்ள வேண்டும். மறுமை நாளின் பயங்கரம் பற்றியும், முஃமின்களுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றியும், காஃபிர்களுக்கு காத்திருக்கும் பயங்கரங்கள் பற்றியும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும். அல்லாஹ் கூறுகிறான், "எவனுடைய பட்டோலை அவனுடைய வலக்கையில் கொடுக்கப்படுகின்றதோ,அவன் சுலபமான விசாரணையாக விசாரிக்கப்படுவான்.இன்னும், தன்னைச் சார்ந்தோரிடமும் மகிழ்வுடன் திரும்புவான்.ஆனால், எவனுடைய பட்டோலை அவனுடைய முதுகுக்குப் பின்னால் கொடுக்கப்படுகின்றதோ-அவன் (தன்குக்) 'கேடு' தான் எனக் கூவியவனாக- நரகத்தில் புகுவான்." -அல்குர்ஆன் 84:07-12-
- மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கைக்குத் தயாராகுமாறு மாணவர்களுக்கு ஆர்வமூட்டவும்.
- மறுமைக்காக கப்றுகளில் இருந்து மனிதர்களை எழுப்பாட்டும் அல்லாஹ்வின் வல்லமையைப் பற்றி மாணவர்களுக்கு புரியவைக்கவும்.

# பாடம் 12

# மூன்றாம் படித்தரம்: இஹ்ஸான்

**பாடத்தின் நோக்கம்:**

1. இஹ்ஸான் என்பதன் அர்த்தத்தை மாணவர் அறிதல்.
2. இஹ்ஸான் எனும் படித்தரத்திற்கான ஆதாரத்தை மாணவர் அறிதல்.
3. வணக்கங்களை உளத்தூய்மையுடன் நிறைவேற்ற மாணவர் பழக்கப்படுதல்.




## கலந்துரையாடல்

**1** கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

இஹ்ஸான் என்பது, அல்லாஹ்வை நீ பார்ப்பது போல் ..............................................................................................., நீ அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் ..............................................................................................................................

**2** இஹ்ஸான் எனும் படித்தரத்திற்கான ஆதாரத்தைக் கூறுக.

3 முழுமையான ஈமானுள்ள ஒருவர் அவரை யாரும் பார்க்காவிட்டாலும் களவெடுக்க மாட்டார். ஏன்?

..........................................................................................................

..........................................................................................................

**எப்போதும் அல்லாஹ் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். எனவே தனிமையிலும், பொதுவெளியிலும் நான் ஒருபோதும் பாவம் செய்ய மாட்டேன்.**

**அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவேன்.**

**ஆசிரியருக்கு**

- இஹ்ஸான் எனும் படித்தரம் மிகவும் உயர்ந்தது என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- இஹ்ஸான் என்பதால் மாத்திரமே வணக்கத்தை பரிபூரணமாக செய்ய முடியும் என்பதை மாணவர்களுக்கு விளக்கவும்.
- அல்லாஹ் எப்போதும் எம்மை கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்பதை மாணவர்களுக்குக் கூறவும். அல்லாஹ் கூறுகிறான், "நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்." -அல்குர்ஆன் 04:01-
- அல்லாஹ்வின் கண்காணிப்பைப் பற்றிய வரலாற்றுச் சம்பவங்களை மாணவர்களுக்கு கூறவும்.

# பாடம் 13

# மூன்றாம் அடிப்படை: முஹம்மத் > அவர்களை அறிதல்

**பாடத்தின் நோக்கம்:**

1. முஹம்மத் அவர்களின் வம்சாவளியை மாணவர் அறிதல்.
2. முஹம்மத் மீது நேசம் கொண்டு அவருக்குக் கட்டுப்பட மாணவர் ஆர்வம் காட்டுதல்.
3. முஹம்மத் அவர்கள் இறுதி நபியாவார் என்பதற்கான ஆதாரத்தை மாணவர் அறிதல்.
4. அல்லாஹ் ஸலவாத்து கூறுகிறான் என்பதற்கான அர்த்தத்தை மாணவர் அறிதல்.

## மூன்று அடிப்படைகள்

அல்லாஹ்வை அறிதல்

மார்க்கத்தை அறிதல்

முஹம்மத் > அவர்களை அறிதல்

**நபி > அவர்களின் வம்சாவளி:**

முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் இப்னு அப்துல் முத்தலிப் இப்னு ஹாஷிம்.

ஹாஷிம் என்பவர் குறைஷியர் ஆவார். குறைஷ் என்பது அரபிகளின் ஒரு வம்சாவளியாகும்.

எனது நபி முஹம்மத் > அவர்கள் ஆவார். அவரே இறுதி நபியாவார்.

அல்லாஹ் கூறுகிறான், "முஹம்மது உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார்"

-அல்குர்ஆன் 33:40-

எனவே நபி >அவர்களுக்கு கட்டுப்படுவது அனைத்து முஸ்லிம்களுக்கும் கட்டாயக் கடமையாகும்.

## கலந்துரையாடல்

**1** கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

1. எனது நபியின் வம்சாவளி முஹம்மத் இப்னு ..........................................................

2. நபி அவர்களை நேசிப்பதும், அவருக்குக் கட்டுப்படுவதும் ..........................................................

3. நபிமார்களுக்கெல்லாம் இறுதியாவனர் .......................................... ஆவார்.

4. நான் நபியவர்களை நேசித்து, அவருக்கு .......................................... . அவரின் சொல், .......................... என்பவற்றை பின்பற்றுவேன்.

2 நபி > அவர்கள் கூறினார்கள், "வெள்ளிக்கிழமை பகலிலும், இரவிலும் என்மீது அதிகம் ஸலவாத்துக் கூறுங்கள். யார் என்மீது ஒரு தடவை ஸலவாத்துக் கூறுகிறாரோ, அல்லாஹ் அவர் மீது பத்து தடவை ஸலவாத்துக் கூறுகிறான்" -பைஹகீ 3/249-

1. நபி > அவர்கள் மீது எந்த நாளில் அதிகமாக ஸலவாத்துக் கூற வேண்டும்?
2. நபி > அவர்கள் மீது ஸஹாபாக்கள் நேசம் கொண்டிருந்தனர் என்பதற்கான சம்பவங்களை ஆசிரியரிடம் கேட்டு தெரிந்துகொள்ளவும்.

**நான் நபி > அவர்களை நேசிக்கிறேன். அவருக்கு கட்டுப்பட்டு நடக்கிறேன்.**

## ஆசிரியருக்கு

- முதலாம், இரண்டாம் அடிப்படைகளை மாணவர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்தி, மூன்றாம் அடிப்படையோடு அவற்றைத் தொடர்புபடுத்திக் கூறவும்.
- நபி > அவர்கள் நபியாக அனுப்பப்படுவதற்கு முன் மக்கள் வழிகேட்டில் வாழ்ந்த விதங்களை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- நபி > அவர்களது வம்சாவளியின் சிறப்பை மாணவர்களுக்கு கூறி, சாதி வேற்றுமைக்கும் நபியவர்களின் வம்சாவளிக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளக்கவும்.
- நபிமார்களில் இறுதியானவர் என்பது, அவருக்குப் பின் வெறு எந்த நபிமாரும் வரமாட்டார்கள் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- நபியவர்கள் மீது எல்லை கடந்து செல்லாமல், அவர் மீது நேசம் வைக்க வேண்டும் என்பதை மாணவர்களுக்கு விளக்கவும்.
- நபியவர்களின் மார்க்கம் தொடர்பான சொல், செயல் போன்ற அனைத்தையும் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்பதை மாணவர்களுக்கு புரியவைக்கவும்.
- நபியவர்கள் மீது -குறிப்பாக அவரின் பெயர் கூறப்படும் போது- அதிகம் ஸலவாத்துக் கூற மாணவர்களை பயிற்றுவிக்கவும்.
- அடியார்கள் மீது அல்லாஹ் ஸலவாத்துக் கூறுகிறான் என்பது, தனக்கு நெருக்கமாக இருக்கும் மலக்குகளிடம் குறித்த அடியானை அல்லாஹ் புகழ்ந்து பேசுகிறான் என்பதே அர்த்தமாகும் என்பதை மாணவர்களுக்கு கூறவும்.

# ஃபிக்ஷன்

## பாடம் 01

# முதலாம் வகுப்பில் கற்றவற்றின் சுருக்கம்

1. தொழுவதற்கு முன் செய்ய வேண்டியவை யாது?

2. வுழு செய்வதற்கு முன் என்ன கூற வேண்டும்?

3. வுழுவை முறிக்கும் காரியங்களைக் குறிப்பிடு.

4. தொழுகையின் முதலாம் தக்பீருக்கு என்ன பெயர் கூறப்படும்?

5. முதலாம் தஷஹ்ஹுத் எப்போது ஓதப்படும்?

6. பின்வரும் இடைவெளியை நிரப்புக.

اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ

........................................................................................

........................................................................................

........................................................................................

7. தொழுகையை முறிக்கும் காரியங்களைக் குறிப்பிடுக.

   1. மலம், சிறுநீர், காற்று போன்றவை வெளியேறுவதால் வுழு முறியும்.
   2. ........................................................................................
   3. ........................................................................................
   4. ........................................................................................
   5. ........................................................................................
   6. ........................................................................................

8. கீழுள்ள ஒவ்வொரு தொழுகையினதும் ரக்அத்துகளைக் குறிப்பிடுக.

ஃபஜ்ர் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா

# பாடம் 02

# இஸ்தின்ஜா, இஸ்திஜ்மார்

**பாடத்தின் நோக்கம்:**

1. மலசலம் கழித்த பின் செய்யவேண்டியவற்றை மாணவர் அறிதல்.
2. இஸ்தின்ஜா, இஸ்திஜ்மார் என்பவற்றின் அர்த்தங்களை மாணவர் அறிதல்.
3. இஸ்திஜ்மார் முறையைப் பயன்படுத்தி சுத்தம் செய்யப் பயன்படுத்தும் பொருட்களை மாணவர் அறிதல்.

**மலமும், சிறுநீரும் உடலை மாசுபடுத்தும் அசுத்தங்களாகும். மலசலம் கழித்த பின் சுத்தம் செய்துகொள்வது அவசியமாகிறது.**



# கலந்துரையாடல்

1. மலசலம் கழித்த பிறகு நீ அவசியம் செய்ய வேண்டியது யாது?

2. கீழுள்ளவற்றை நிரப்புக.

இஸ்தின்ஜா என்பது, ........................................................................................................

இஸ்திஜ்மார் என்பது ........................................................................................................

3. சரியான விடையைத் தேர்வு செய்க.

1.பின்வருபவைகளில் இஸ்திஜ்மார் செய்வதற்கு பயன்படுபவை...

கற்கள்     தண்ணீர்     டிஷ்யூ

2. பின்வருவனவற்றில் அசுத்தமானது...

சிறுநீர்     வியர்வை     எச்சில்

3. ஆடையில் பட்ட அசுத்தத்தை நீக்குவதற்கு பயன்படுவது...

கற்கள்     தண்ணீர்     மண்

4. பொருத்தமானவைகளை வைத்து பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

மலம் அல்லது சிறுநீர் வெளியாகும் இடத்தை தண்ணீர், அல்லது ................................ அல்லது ................................ மூலம் சுத்தம் செய்வேன்.

5. கீழுள்ள வசனத்தை பார்த்து எழுதுக.

மலசலம் கழித்த பின் அவை வெளியான இடங்களைக் கழுவுவேன். பின்னர் வுழுசெய்து கொள்வேன்.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

மலசலம் கழித்த பின் இரு கைகளையும் நன்றாக கழுவிக்கொள்வேன்.

மலசலம் கழிக்கும் போது யாருடனும் பேச மாட்டேன்.

## இவ்விரு துஆக்களையும் மனனம் செய்க.

மலசல கூடத்தில் நுழையும் போது,

بِاسْمِ اللهِ اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ



மலசல கூடத்திலிருந்து வெளியேறும் போது,

غُفْرَانَكَ



### ஆசிரியருக்கு

- மலசலம் கழித்தவுடன் அவை வெளியேறிய இடங்களை சுத்தம் செய்ய வேண்டும் என மாணவர்களுக்குக் கூறவும்.
- இஸ்திஜ்மார் முறையில் சுத்தம் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களை மாணவர்களுக்குக் கூறவும்.
- இஸ்தின்ஜா, இஸ்திஜ்மார் முறையில் சுத்தம் செய்யும் போது இடது கையைப் பயன்படுத்துமாறும், சுத்தம செய்த பின் இரு கைகளையும் நன்றாக கழுவுமாறும் மாணவர்களுக்கு கூறவும்.
- இஸ்திஜ்மார் செய்யக் கூடாத பொருட்களை மாணவர்களுக்கு பட்டியலிடவும்.
- மலசல கூடத்தில் நுழையும் போது இடது காலை முன்வைக்குமாறும், வெளியேறும் போது வலது காலை முன்வைக்குமாறும் கூறவும்.

# பாடம் 03

# வுழூ செய்யும் முறை

**பாடத்தின் நோக்கம்:**

1. வுழூவிற்காக நிய்யத் வைக்கும் முறையை மாணவர் அறிதல்.
2. வுழூ செய்யும் சரியான முறையை பூரணமாக மாணவர் அறிதல்.
3. இரு மணிக்கட்டுகளையும், இரு முழங்கைகளையும் கழுவும் முறையை மாணவர் அறிதல்.

முஹம்மத் தனது தம்பி அப்துல்லாஹ்வுக்கு வுழூ செய்யும் முறையைக் கற்றுக்கொடுக்க எண்ணினான்.

முஹம்மத்: அப்துல்லாஹ், நாங்கள் வுழூ செய்து தொழுகைக்கு தயாராகுவோமா?

அப்துல்லாஹ்: எப்படி வுழூ செய்வது?

முஹம்மத்: முதலில் 'வுழூ செய்கிறேன்' என மனதால் நினைத்துக்கொள்ள வேண்டும். பின்னர்,



**01** (بِاسْمِ الله) கூறி இரு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவ வேண்டும்.



**02** மூன்று முறை வாய் கொப்பளித்து, மூக்கினுள் தண்ணீர் செலுத்தி, சீந்திவிட வேண்டும்.



**03** மூன்று முறை முகத்தை கழுவ வேண்டும்.



**04** வலது கையை விரல் நுனிகளில் இருந்து முழங்கை வரை மூன்று முறை கழுவ வேண்டும். பின்னர் இடடது கையையும் அவ்வாறே கழுவ வேண்டும்.



**05** தலை முழுவதையும், இரு காதுகளையும் ஒரே தடவையில் ஒரு முறை தடவ வேண்டும்.



**06** வலது காலை விரல் நுழிகளில் இருந்து கரண்டை வரை மூன்று முறை கழுவ வேண்டும். பின்னர் இடது காலையும் அவ்வாறே கழுவ வேண்டும்

அப்துல்லாஹ்: இரு கைகளையும் கழுவுவதற்கு முன் இரு கால்களையும் கழுவ முடியுமா?

முஹம்மத்: அவ்வாறு செய்வது கூடாது. நான் கூறிய விதத்தில் ஒன்றன் பின் ஒன்றாகவே கழுவ வேண்டும்.

அப்துல்லாஹ்: நான் ஒன்றைக் கேட்கவா? முகத்தையும், இரு கைகளையும் கழுவிய பின் எனக்கு தொலைபேசி அழைப்பு வந்து, நான் சென்று பேசிவிட்டு, சிறிது தாமதித்து வந்து தலையையும், இரு காதுகளையும் தண்ணீரால் தடவிக் கொண்டால் எனது வுழூ கூடுமா?

முஹம்மத்: அவ்வாறு இடைவெளி விடுவது கூடாது அப்துல்லாஹ். வுழூவின் ஒவ்வொரு உறுப்பையும் கழுவும் போது தொடர்ச்சியை பேண வேண்டும்.

## கலந்துரையாடல்

1. நிய்யத் என்பதன் அர்த்தம் யாது? நிய்யத்தை எவ்வாறு வைக்க வேண்டும்.?

2. பின்வரும் வசனங்களை முழுமைப்படுத்துக.
   1. எனது இரு மணிக்கட்டுகளை கழுவி, வாய் கொப்பளித்து, ..........................., ...........................
   2. எது இரு கால்களையும் ...........................

3. பகுதி (அ) வை, பொருத்தமான பகுதி (ஆ) உடன் இணைக்குக.

| பகுதி (அ) | பகுதி (ஆ) |
|---|---|
| தலையை | கழுவுவேன் |
| முகத்தை | கழுவுவேன் |
| காலை | தடவுவேன் |

4. வுழூவில் கடைசியாக கழுவும் உறுப்புக்கு வர்ணம் தீட்டுக.

இரு கைகள் | இரு கால்கள் | தலை | முகம்

5 வுழுவின் உறுப்புகளை வரிசைப்படுத்துக.

இரு கால்கள் இரு கைகள் தலை முகம் இரு மணிக்கட்டுகள்

6 பின்வருவனவற்றில் சரியான விடைக்கு (√) எனவும், பிழையான விடைக்கு (x) எனவும் அடையாளமிடுக.

1. வலது கையை கழுவுவதற்கு முன்பே வலது காலை கழுவுவேன். ( )

2. இரு கால்களையும் கழுவிய பின்னர் தலையை தண்ணீரால் தடவிக்கொள்வேன். ( )

3. முகத்தை கழுவிய பின் இரு கைகளையும் கழுவுவேன். ( )

7 பின்வரும் வசனங்களை பார்த்து எழுதுக.

தண்ணீர் படாதவாறு எந்த வுழுவின் உறுப்பையும் விட்டுவைக்க மாட்டேன்.

.............................................................................................................

.............................................................................................................

ஒரு உறுப்பைக் கழுவியதும் தாமதமின்றி அடுத்த உறுப்பைக் கழுவுவேன்

.............................................................................................................

.............................................................................................................

வுழுவின் உறுப்புகளை தொடராக கழுவுவேன்.

.............................................................................................................

.............................................................................................................

## ஆசிரியருக்கு

- தூய்மையாக இருப்போரை அல்லாஹ் விரும்புகிறான் என்பதை மாணவர்களுக்கு புரியவைக்கவும்.
- தண்ணீரை வீண்விரயம் செய்யாமல் சிக்கனமாக பயன்படுத்துமாறு மாணவர்களுக்கு கூறவும். இது அல்லாஹ்வால் எமக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடையாகும்.
- கொப்பளித்தல், மூக்கினுள் தண்ணீர் செலுத்துதல், மூக்கை சீந்துதல் என்பவற்றின் செயல்முறையை மாணவர்களுக்கு செய்து காண்பிக்கவும்.
    - வாய் கொப்பளித்தல்: தண்ணீரை வாய்க்குள் எடுத்து, அசைத்தல்.
    - மூக்கினுள் தண்ணீர் செலுத்துதல்: மூச்சை உள்ளே எடுப்பதன் மூலம் தண்ணீரை மூக்கினுள் செலுத்துதல்.
    - மூக்கை சீந்துதல்: மூக்கின் உள்ளே சென்ற தண்ணீரை மூச்சை விடுவதன் மூலம் வெளியில் எடுத்தல்.
- வுழுவை நேர்த்தியாக மாணவர்களுக்கு செய்து காண்பிக்கவும்.



# பாடம் 04

# வுழுவை முறிப்பவை

**பாடத்தின் நோக்கம்:**

1. வுழுவை முறிப்பவை பற்றி மாணவர் அறிதல்.
2. வுழு முறிந்துவிட்டால் செய்யவேண்டியவை பற்றி மாணவர் அறிதல்.




மேற்கூறப்பட்ட ஏதேனும் ஒரு முறையில் வுழு முறிந்துவிட்டால் மீண்டும் வுழுவை செய்துகொள்வது அவசியமாகும்.

## கலந்துரையாடல்



1. பின்வருவனவற்றுள் வுழுவை முறிப்பவற்றுக்கு கீழ் கோடிடுக.

சிரிப்பு, ஆழ்ந்த உறக்கம், பேச்சு, முன்பின் துவாரங்களில் ஏதேனும் வெளியாகும், ஒட்டக இறைச்சி சாப்பிடுதல், கரண்டை தெரிய கமுசன் அணிதல்,.

2 ஸைத் வழூ செய்துவிட்டு, ஆட்டு இறைச்சியை சாப்பிட்டுவிட்டான். அவனின் வழூ முறியுமா? ஏன்?

3 நீர் தொழுகைக்கு தயாராகும் போது வழூ முறிந்துவிட்டது. இப்போது நீர் அவசியம் செய்ய வேண்டியது யாது?

சரியான விடையைத் தெரிவு செய்க.

1. மீண்டும் வழூ செய்து, மீண்டும் தொழுவேன்.
2. மீண்டும் வழூ செய்வேன்.

4 இறைச்சி சாப்பிட்டுவிட்டாய். தொழுது முடிந்ததும் சாப்பிட்டது ஒட்டக இறைச்சி என தெரிந்துவிட்டது. இப்போது என்ன செய்ய வேண்டும்?

................................................................................................

5 பின்வரும் வசனத்தை பார்த்து எழுதுக.

வழூ முறிந்துவிட்டால் மீண்டும் வழூ செய்துகொள்வேன்.

................................................................................................

................................................................................................

**ஆசிரியருக்கு**

- வழூ முறிந்துவிடும் என்பதன் அர்த்தத்தை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- வழூவை முறிக்கும் காரியங்கள் என அனேகமான விடயங்கள் மக்கள் மத்தியில் பரவிக் காணப்படுகின்றன. இங்கு கற்ற விடயங்களைத் தவிர வேறு ஏதும் வழூவை முறித்து விடாது என்பதை மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.
- தொழுகைகள், தவாஃப் செய்தல், அரபியில் உள்ள அல்குர்ஆனைத் தொடுதல் போன்ற வணக்கங்களுக்கு வழூ செய்வது அவசியமாகும். இவைகளின் போது வழூ முறிந்து விட்டால் அவசியம் மீண்டும் வழூ செய்ய வேண்டுமென்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.

# பாடம் 05

# தொழுகையை ஆரம்பிக்கும் துஆ

**பாடத்தின் நோக்கம்:**

1. வுழூவை முறிப்பவை பற்றி மாணவர் அறிதல்.
2. வுழூ முறிந்துவிட்டால் செய்யவேண்டியவை பற்றி மாணவர் அறிதல்.

தொழுகையில் ஓத வேண்டிய கடமையான துஆக்களில் 'துஆஉல் இஸ்திஃப்தாஹ் - தொழுகையை ஆரம்பிக்கும் துஆ' வும் உள்ளடங்கும்.

سُبْحانَكَ اللَّهُمَّ وبِحَمْدِكَ، تَبارَكَ اسْمُكَ، وتَعالى جَدُّكَ، ولا إلَهَ غَيْرُكَ

இஹ்ராம் தக்பீர் கூறியதும் இந்த துஆவை ஓத வேண்டும்.

## கலந்துரையாடல்

1. பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

(غَيْرُكَ, وبِحَمْدِكَ, اسْمُكَ, جَدُّكَ)

سُبْحانَكَ اللَّهُمَّ ........... ، تَبارَكَ ........... ، وتَعالى ........... ، ولا إلَهَ...........

2. தொழுகையை ஆரம்பிக்கும் துஆவை எப்போது ஓத வேண்டும்?

3. சரியான விடையைத் தேர்வு செய்து வர்ணம் தீட்டுக.

தொழுகையில் துஆஉல் இஸ்திஃப்தாஹ் ஓதப்படும் இடம்

சூறதுல் ஃபாதிஹா ஓதிய பின் | இஹ்ராம் தக்பீர் கூறிய பின்

4 பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

(இரண்டாவது - மூன்றாவது - முதலாவது)

இஹ்ராம் தக்பீர் என்பது தொழுகையின் .................................................... தக்பீராகும்.

5 துஆஉல் இஸ்திஃப்தாஹை கூறுக.

6 சரியான விடைக்கு (√) எனவும், பிழையான விடைக்கு (X) அடையாளமிடுக.

- தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் துஆஉல் இஸ்திஃப்தாஹை ஓதுவேன். ( )
- துஆஉல் இஸ்திஃப்தாஹ் தொழுகையின் முதலாம் ரக்அத்தில் ஓத வேண்டும். ( )

7 பின்வரும் வசனத்தைப் பார்த்து எழுதுக.

இஹ்ராம் தக்பீருக்குப் பின் துஆஉல் இஸ்திஃப்தாஹை ஓதிக்கொள்வேன்.

..............................................................................................................

..............................................................................................................

**ஆசிரியருக்கு**

- துஆஉல் இஸ்திஃப்தாஹ் என்பது தொழுகையின் முதலாம் ரக்அத்தில் இஹ்ராம் தக்பீருக்குப் பின் ஓதப்படும் துஆ என்பதை அழுத்தமாக மாணவர்களுக்குக் கூறவும்.
- துஆஉல் இஸ்திஃப்தாஹின் பொருளையும், அர்த்தத்தையும் மாணவர்களுக்கு கூறவும்.
- தமிழில் இந்த துஆவின் பொருள், "இறைவா நீ தூயவன். உன்னைப் புகழ்கிறேன். உன் பெயர் பாக்கியமானது. உன் வல்லமை உயர்ந்துள்ளது. உன்னைத் தவிர வணக்கத்துக்கு உரியவன் யாருமில்லை."

# பாடம் 06 கடமையான தொழுகைகள்

**பாடத்தின் நோக்கம்:**

1. தொழுகையின் முக்கியத்துவத்தை மாணவர் அறிதல்.
2. ஒரு நாளில் உள்ள கடமையான தொழுகைகளின் எண்ணிக்கையை மாணவர் அறிதல்.
3. கடமையான ஒவ்வொரு தொழுகையினதும் ரக்அத்துகளின் எண்ணிக்கையை மாணவர் அறிதல்.

## தொழுகை என்பது இஸ்லாத்தின் இரண்டாவது கடமையாகும்.

**தொழுகையை பேணித் தொழுவது சுவனம் நுழைவதற்கு காரணமாக அமையும்.**

**தொழுகையை விடுவது நரகம் நுழைவதற்கு காரணமாக அமையும்.**

## கடமையான தொழுகைகள் ஒரு நாளைக்கு ஐந்து உள்ளன.

| ஃபஜ்ர் | லுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 02 ரக்அத்கள் | 04 ரக்அத்கள் | 04 ரக்அத்கள் | 03 ரக்அத்கள் | 04 ரக்அத்கள் |

# கலந்துரையாடல்

1 பின்வரும் இடைவெளியை நிரப்புக.

1. இஸ்லாத்தின் ருக்குன்கள் ஐந்து ஆகும். அவை: இரு கலிமாக்கள், ..............................................., ஸகாத், ரமழான் மாத நோன்பு, ஹஜ்.

2. தொழுகையை பேணித் தொழுவது ............................................ நுழைவதற்கு காரணமாக அமையும். தொழுகையை விடுவது ............................................ நுழைவதற்கு காரணமாக அமையும்.

2 ஒரு நாளில் உள்ள கடமையான தொழுகைகளைக் கூறுக.

3 பகுதி (அ) வில் இருப்பதை, பகுதி (ஆ) வுடன் இணைக்குக.

| பகுதி (அ) |
| --- |
| ஃபஜ்ர் தொழுகை |
| லுஹர் தொழுகை |
| மஃரிப் தொழுகை |

| பகுதி (அ) |
| --- |
| 04 ரக்அத்கள் |
| 02 ரக்அத்கள் |
| 03 ரக்அத்கள் |
| 01 ரக்அத் |

4 சொற்களை ஒழுங்குபடுத்தி வசனம் அமைக்குக.

(நிறைவேற்றுகிறான் - குறிப்பிட்ட நேரத்தில் - தொழுகையை - ஸைத்)

..............................................................................................................................

..............................................................................................................................

(ருக்குன் ஆகும் - தொழுகை - இஸ்லாத்தின் - இரண்டாவது)

..............................................................................................................................

..............................................................................................................................

5 நான்கு ரக்அத் தொழுகைகளுக்கு வட்டம் வரைக.

ஃபஜ்ர் லுஹர் அஸர் மஃரிப் இஷா

ஆசிரியருக்கு

- தொழுகையை இஸ்லாத்தின் ருக்குன்களோடு தொடர்புபடுத்தி மாணவர்களுக்குக் கூறுக.
- தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுமாறு மாணவர்களை பயிற்றுவிக்கவும். ஏனெனில் தொழுகை இஸ்லாத்தின் இரண்டாவது கடமையாகவும், சுவனம் செல்ல காரணமாகவும் இருக்கிறது. தொழுகையை விடுவது நரகம் செல்ல காரணமாக அமைகிறது. நபி > அவர்கள் கூறினார்கள், "எமக்கும் இறைநிராகரிப்பாளர்களுக்கு இடையிலுள்ள வேறுபாடு தொழுகையாகும். யார் அதை விடுகிறாரோ அவர் இறைநிராகரிப்பாளர் ஆகிறார்." -திர்மிதி 2621-
- நோய், பயணம் என எல்லா சந்தர்ப்பங்களிலும் தொழுகையை விடக் கூடாது என்பதை மாணவர்களுக்கு அறிவிருத்தவும்.

# பாடம் 07

# தஷஹ்ஹுத்

**பாடத்தின் நோக்கம்:**

1. தஷஹ்ஹுதை மாணவர் மனனம் செய்தல்.
2. தொழுகையில் தஷஹ்ஹுத் ஓத வேண்டிய இடத்தை மாணவர் அறிதல்.

اَلتَّحِيَّاتُ لِلَّهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ، اَلسَّلَامُ عَلَيْكَ
أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ، اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلَى
عِبَادِ اللَّهِ الصَّالِحِيْنَ، أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

## தஷஹ்ஹுத் ஓத வேண்டிய இடங்கள்

மூன்று ரக்அத், மற்றும் நான்கு ரக்அத் தொழுகைகளில் இரண்டாம் ரக்அத்தில் ஓத வேண்டும். இதற்கு "முதலாம் தஷஹ்ஹுத்" எனக் கூறப்படும்.

ஒவ்வொரு தொழுகையினதும் கடைசி ரக்அத்திலும் ஓத வேண்டும். இதற்கு "இறுதி தஷஹ்ஹுத்" எனக் கூறப்படும்.

# கலந்துரையாடல்

1 தஷஹ்ஹுதை மனனம் செய்து கூறவும்.

2 கீழுள்ள இடைவெளியை நிரப்புக.

1. மூன்று ரக்அத், மற்றும் நான்கு ரக்அத் தொழுகைகளில் இரண்டாம் ரக்அத்தில் ஓத வேண்டும். இதற்கு .................................................................... எனக் கூறப்படும்.

2. ஒவ்வொரு தொழுகையினதும் கடைசி ரக்அத்திலும் ஓத வேண்டும். இதற்கு .................................................................................... எனக் கூறப்படும்.

3 தஷஹ்ஹுதில் இஸ்லாத்தின் ருக்குன்களில் ஒன்று உள்ளது. அதைக் கண்டுபிடித்துக் கூறவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

4 சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. முதலாம் தஷஹ்ஹுத் ஓதப்படும் இடம்,

அ. முதலாம் ரக்அத் ஆ. இரண்டாம் ரக்அத்

2. இறுதி தஷஹ்ஹுத் ஓதப்படும் இடம்,

அ. நபி > மீது ஸலவாத்து கூறுவதற்கு முன்
ஆ. நபி > மீது ஸலவாத்து கூறிய பின்

5 ஒரு தஷஹ்ஹுத் உள்ள தொழுகைகளை ஒரு பகுதியிலும், இரண்டு தஷஹ்ஹுத் உள்ள தொழுகைகளை இன்னொரு பகுதியிலும் வகைப்படுத்துக.

ஃபஜ்ர் | லுஹர் | அஸர் | மஃரிப் | இஷா

| ஒரு தஷஹ்ஹுத் | இரு தஷஹ்ஹுத் |
|---|---|
| 1 - ........................ | 1 - ........................ |
| 2- ........................ | 2- ........................ |
| 3- ........................ | 3- ........................ |
| 4- ........................ | 4- ........................ |

## ஆசிரியருக்கு

- தஷஹ்ஹுதின் பொருளை மாணவர்கள் புரியவும் வகையில் கூறவும்.
- (التَّحِيَّاتُ لِلَّهِ) எல்லாஹ்க் காணிக்கைகளும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை: சாந்தியும், நிலையான இருப்பும் அல்லாஹ்வுக்கே உரித்தானது.
- (وَالصَّلَوَاتُ ) வணக்கங்களும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை: கடமையான, உபரியான தொழுகைகளும், ஏனைய வணக்கங்களும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே சொந்தமானவை.
- (وَالطَّيِّبَاتُ) நல்லவைகளும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை: சொல், செயல், பொருள் சார்ந்த அனைத்து நல்லவைகளும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை.
- அல்லாஹ்வின் நல்லடியார்கள் என்போரின் பண்புகளை மாணவர்களுக்கு கூறி, நபி > அவர்களை நேசிப்பதன் அவசியத்தையும் மாணவர்களுக்கு கூறவும்.

## பாடம் 08

# நபி > மீது ஸலவாத்து கூறல்

**பாடத்தின் நோக்கம்:**

1. நபி > அவர்கள் மீது ஸலவாத்துக் கூறும் முறையை மாணவர் அறிதல்.
2. தொழுகையில் நபி > அவர்கள் மீது ஸலவாத்துக் கூற வேண்டிய இடத்தை மாணவர் அறிதல்.

اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا
صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيْدٌ
مَجِيْدٌ، اَللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا
بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ
مَجِيْدٌ.

இறுதி தஷஹ்ஹுத் ஓதிய பின், ஸலாம் கொடுப்பதற்கு முன் நபி > அவர்கள் மீது ஸலவாத்து கூற வேண்டும்.

## கலந்துரையாடல்

1. ஸலவாத்தை மனனம் செய்து கூறவும்.
2. மேலுள்ள ஸலவாத்தை அடிப்படையாக வைத்து, கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

அ. அல்லாஹ்வின் பெயர்கள்: ..........................................................................

ஆ. நபிமார்களின் பெயர்கள்: ..........................................................................

3 சரியான விடையை அறிந்து, வட்டம் வரையவும்.

தொழுகையில் நபி > அவர்கள் மீது ஸலவாத்து கூறும் இடம்:

அ. ருகூஃ   ஆ. ஸுஜூத்   இ. இறுதி தஷஹ்ஹுதின் பின்

## ஆசிரியருக்கு

- நபி > அவர்களின் பெயரைக் கேட்கும் போதும், கடைசி தஷஹ்ஹுதிலும், வெள்ளிக்கிழமையிலும் அதிகம் ஸலவாத்து கூறுவதற்கு மாணவர்களை பயிற்றுவிக்கவும். நபி > அவர்கள் கூறினார்கள், "யார் என் மீது ஒரு தடவை ஸலவாத் கூறுகிறாரோ அல்லாஹ் அவர் மீது பத்து தடவை ஸலவாத் கூறி, அவரின் பத்து பாவங்களை மன்னித்து, பத்து அந்தஸ்த்துகளை உயர்த்துகிறான்." -நஸாஈ 1297-
- அடியார்கள் மீது அல்லாஹ் ஸலவாத்துக் கூறுகிறான் என்பது, தனக்கு நெருக்கமாக இருக்கும் மலக்குகளிடம் குறித்த அடியாவைப் பற்றி அல்லாஹ் புகழ்ந்து பேசுகிறான் என்பது அர்த்தமாகும்.
- பரக்கத் என்பது அபிவிருத்தியைக் குறிக்கிறது. அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் அனைத்து நலவுகளும் நிலையானதாகவும், அதிகரித்த வண்ணமுமே இருக்கும். இதுவே பரக்கத் - அபிவிருத்தி எனக் கூறப்படும்.



## பாடம் 09

# ஸலவாத்தின் பின் ஓதவேண்டியவை.

**பாடத்தின் நோக்கம்:**

1. தொழுகையில் நபி > அவர்கள் மீது ஸலவாத்துக் கூறிய பின் ஓத வேண்டிய சில பாதுகாப்பு தொடர்பான துஆவை மாணவர் அறிதல்.
2. அவசியம் பாதுகாப்பு தேட வேண்டிய நான்கு விடயங்கள் பற்றியும் மாணவர் அறிதல்.

ஒருவர் இறுதி தஷஹ்ஹுத் ஓதுவதற்காக அமர்ந்து, நபி > அவர்கள் மீதும் ஸலவாத்துக் கூறிய பின், பின்வரும் துஆவை ஓதுவதன் மூலம் நான்கு விடயங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேட வேண்டும்.



اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ جَهَنَّمَ، وَمِنْ
عَذَابِ الْقَبْرِ، وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ، وَمِنْ
شَرِّ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ.

இறைவா!

1. நான் உன்னிடம் நரகத்தின் வேதனையிலிருந்தும்,
2. கப்ரின் வேதனையிலிருந்தும்,
3. வாழ்வு மற்றும் இறப்பின் சோதனையிலிருந்தும்,
4. தஜ்ஜாலால் ஏற்படும் குழப்பத்தின் தீங்கிலிருந்தும் பாதுகாப்பு தேடுகிறேன்.

# கலந்துரையாடல்

1. தொழுகையில் இறுதி தஷஹ்ஹுதை ஓதிய பின் நபி > அவர்கள் மீது ஸலவாத்துக் கூறிய பின், பாதுகாப்பு தேட வேண்டிய நான்கு விடயங்களையும் குறிப்பிடுக.

1- ........................................ 2- ........................................

3- ........................................ 4- ........................................

2. பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

தஜ்ஜாலின் தீங்கிலிருந்து பாதுகாப்புப் பெறும் முறைகள்:

1. இறுதி தஷஹ்ஹுதில் ........................................ அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுதல்.
2. ........................................ முதல் பத்து வசனங்களையும் மனனம் செய்தல்.

## ஆசிரியருக்கு

- மேற்குறிப்பிடப்பட்ட நான்கு விடயங்களை விட்டும் எப்போதும் -குறிப்பாக தொழுகையிலும்- பாதுகாவல் தேட வேண்டுமென மாணவர்களுக்குக் குறிப்பிட்டு, அவை பற்றிய தெளிவையும் மாணவர்கள் கற்பிக்கவும்.
- வாழ்வின் சோதனை: வாழும் காலத்தில் உலக மோகங்களிலும், ஷைத்தானின் தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பு தேடுதல்.
- இறப்பின் சோதனை: மரண வேளையில் இடம்பெறும் கடினம், கப்றின் சோதனை, கப்றில் கேட்கப்படும் கேள்விகள் போன்ற சோதனைகளை விட்டும் பாதுகாவல் தேடுதல்.
- தஜ்ஜாலின் குழப்பம்: தஜ்ஜால் என்பவன் பொய்கூறும் காஃபிரான மனிதனாவான். உலகம் அழியும் கடைசிக் காலத்தில் உலகில் தோன்றுவான். சில அற்புதங்கள் செய்வதற்கு அல்லாஹ் இவனுக்கு சக்தி வழங்குவான். அவற்றை செய்துகாட்டி 'நான் தான் அல்லாஹ்' எனக் கூறுவான். தன்னை பின்பற்றுவோருக்கு மழை பொழிவிப்பான். தன்னை பின்பற்றாதோருக்கு பஞ்சத்தை வழங்குவான். பல மனிதர்கள் அவனின் இவ் ஏமாற்று வித்தையைக் கண்டு அவன் பின்னால் செல்வார்கள். அவன் உலகில் மக்காவையும், மதீனாவையும் தவிர மற்ற எல்லா இடங்களுக்கு செல்வான். பின்னர் ஈஸா ÷ அவர்கள் அவனைக் கொல்வாரகள்.
- அவனின் குழப்பத்திலிருந்து பாதுகாப்பு தேடுவதற்கு முதலில் எமது ஈமானில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். பின்னர் இப்பாடத்தில் குறிப்பிடப்பட்ட துஆவை ஓதிக்கொள்ள வேண்டும். அதோடு சூறதுல் கஹ்ஃபின் முதல் பத்து வசனங்களை மனனம் செய்து ஓதி வர வேண்டும். நபி > அவர்கள் கூறினார்கள், ""அல்கஹ்ஃப்" எனும் (18ஆவது) அத்தியாயத்தின் ஆரம்பப் பத்து வசனங்களை மனனம் செய்திருப்பவர் (பெருங்குழப்பவாதியான) தஜ்ஜாலிடமிருந்து பாதுகாக்கப்படுவார்." -முஸ்லிம் 809-

# பாடம் 10

# தொழும் முறை

**பாடத்தின் நோக்கம்:**

1. தொழும் முறையை மாணவர் முழுவதுமாக அறிந்திருத்தல்.
2. சரியான முறையில் தொழுவதற்கு மாணவர் பயிற்றுவிக்கப்படுதல்.

**01**

கிப்லாவை முன்னோக்கி, ஸுஜூது செய்யும் இடத்தைப் பார்த்தவனாக இஹ்ராம் தக்பீரைக் கூறுவேன். பின்பு துஆஉல் இஸ்திஃப்தாஹை ஓதிக்கொள்வேன்.



**02**

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

எனக் கூறி, சூறதுல் ஃபாதிஹாவை ஓதுவேன். பின்பு அல்குர்ஆனில் நான் மனனம் செய்துள்ள ஏனைய சூறாவையும் ஓதிக்கொள்வேன்.



**03**

இரு கைகளையும் உயர்த்தி (اَللّٰهُ أَكْبَرُ) எனக் கூறி, ருகூவிற்கு செல்வேன். அதில்,

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ

என மூன்று முறை கூறுவேன்.



**04**

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ رَبَّنَا وَلَكَ الْحَمْدُ حَمْدًا كَثِيْرًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ

என கூறியவாறு ருகூவிலிருந்து எழும்புவேன்.



**05**

தக்பீர் கூறி, ஏழு உறுப்புகளால் ஸுஜூது செய்து, அதில்

سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى

என மூன்று முறை கூறுவேன்.



06 (اَللّٰهُ أَكْبَرُ) எனக் கூறி நடு இருப்பிற்கு வந்து,
رَبِّ اغْفِرْ لِيْ
என ஓதிக்கொள்வேன்.



07 பின்பு (اَللّٰهُ أَكْبَرُ) எனக் கூறி இரண்டாம் முறை ஸுஜூதிற்குச் சென்று, அதில்
سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى
என மூன்று முறை கூறுவேன்.



08 (اَللّٰهُ أَكْبَرُ) எனக் கூறி, இரண்டாம் ரக்அத்திற்காக எழும்புவேன். முதலாம் ரக்அத்தில் செய்தது போன்று இதிலும் செய்வேன்.



09 இரண்டாம் ரக்அத்தின் இறுதியில் முதலாம் தஷஹ்ஹுதிற்காக அமருவேன். இதில் வலது கால் பாதத்தை நட்டு வைத்து, இடது பாதத்தை மடித்து அதில் அமர்வேன். பின்னர் முதலாம் தஷஹ்ஹுதை ஓதுவேன்.



10 முதல் இரு ரக்அத்துகளிலும் செய்தது போன்று மற்றைய ரக்அத்துகளிலும் செய்வேன்.



11 தொழுகையின் இறுதியில் இறுதி தஷஹ்ஹுதிற்காக அமருவேன். இதில் வலது கால் பாதத்தை நட்டு வைத்து, இடது கால் பாதத்தை வலது தொடைக்கும், கணுக்காலுக்கும் இடையே வைத்து, தரையில் அமர்வேன். இறுதி தஷஹ்ஹுதை ஓதி, நபி அவர்கள் மீது ஸலவாத்தும் கூறி, பாதுகாப்பு துஆவையும் ஓதி
اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰه
என வலது பக்கமாகவும் இடது பக்கமாகவும் ஸலாம் கொடுபபேன்.



# கலந்துரையாடல்

1. தொழும் முறையை விளக்குக.

2. பின்வரும் இடைவெளிகளை பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

(சூறதுல் ஃபாதிஹா. அல்லாஹு அக்பர், கிப்லா, அல்குர்ஆனில் மனனம் செய்தவைகள்)

தொழும் போது ஒரு முஸ்லிம் ................................ வை முன்னோக்க வேண்டும். தொழுகையை ஆரம்பிக்கும் போது ........................................ எனக் கூறவேண்டும். பின்னர் .................................................. வை ஓத வேண்டும். அதன் பின் .......................................................................... ஐ ஓத வேண்டும்.

3. பின்வருவனவற்றில் சரியான விடையை தெரிவு செய்க.

அ. தொழும் போது நான் பார்க்கும் இடம்:

அ. கூரை ஆ. சுவர் இ. ஸுஜூது செய்யும் இடம்

ஆ. ருகூவில் எனது இரு மணிக்கட்டுகளையும் வைக்கும் இடம்:

அ. இரு முழங்கால்கள் ஆ. இரு கெண்டைக்கால்கள்

இ. ஸுஜூதில் நான் ஓத வேண்டியது:

அ. سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى ஆ. سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْم

4 பகுதி (அ) வில் இருப்பவற்றை பகுதி (ஆ) உடன் இணைக்குக.

| பகுதி (அ) | பகுதி (ஆ) |
| --- | --- |
| ஸுஜூதில் ஓதுவது | سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْم |
| ருகூவில் ஓதுவது | سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى |
| இரு ஸஜ்தாவுக்கு இடையில் ஓதுவது | سَمِعَ اللَّهُ لِمَنْ حَمِدَهُ |
| ருகூவிலிருந்து எழும் போது ஓதுவது | رَبِّ اغْفِرْ لِيْ |
| | اَللَّهُ أَكْبَرُ |

**ஆசிரியருக்கு**

- தொழும் முறையை மாணவர்களுக்கு செய்து காட்டவும்.
- பிழைகளை திருத்திக்கொள்ளும் வகையில் சில மாணவர்களை தேர்வு செய்து, ஏனைய நண்பர்களுக்கு முன்னால் தொழுது காண்பிக்குமாறு கூறவும். தவறு விடும் பட்சத்தில் அதை மீண்டும் செய்யுமாறு பணிக்கவும்.
- ருகூவிலும், ஸுஜூதிலும் ஓத வேண்டிய துஆக்களை மூன்று முறை ஓதுவது ஆகுமானதாகும். அதை விடவும் அதிக தடவைகள் ஓத முடியும் என்பதை விளக்குக.
- "அல்லாஹ்வின் தூதர் > அவர்கள் (தொழுகையை முடிக்கும்போது) வலப் பக்கத்திலும் இடப் பக்கத்திலும் (முகத்தைத் திருப்பி இருமுறை) சலாம் கூறுவார்கள். (அவ்வாறு திரும்பும்போது) அவர்களுடைய கன்னத்தின் வெண்மையை நான் காண்பேன்".-முஸ்லிம் 582- எனும் ஹதீஸிற்கு இணங்க ஸலாம் கூறி, தொழுகையை முடிக்கும் முறையை மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.
- ஆண்கள் தொழும் போது தொப்புளுக்கும், இரு முழங்கால்களுக்கும் இடைப்பட்ட பகுதியை அவசியம் மறைத்திருக்க வேண்டுமெனவும், பெண்கள் முகத்தையும், இரு மணிகட்டுகளையும் தவிர உடலின் அனைத்து உறுப்புகளையும் அவசியம் மறைத்திருக்க வேண்டுமெனவும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.

# பாடம் 11

# தொழுகையை முறிப்பவை

**பாடத்தின் நோக்கம்:**

1. தொழுகையை முறிப்பவற்றை மாணவர் அறிதல்.
2. வுழூவை முறிப்பவற்றுக்கும், தொழுகையை முறிப்பவற்றுக்கும் இடையிலுள்ள தொடர்பை மாணவர் அறிதல்.
3. தொழுகை முறிந்துவிட்டால் செய்ய வேண்டியதை மாணவர் அறிதல்.

**தொழுகையை முறிப்பவை**

01 உண்ணுதல்

02 பருகுதல்

03 கதைத்தல்

04 சிரித்தல்

05 வுழூ முறிதல்

06 அதிகமாக அசைதல்

மேற்குறிப்பட்டவைகளில் ஏதேனும் ஒன்று நிகழ்ந்துவிட்டால் தொழுகை முறிந்துவிடும். அத்தொழுகையை மீண்டும் தொழ வேண்டும்.

தொழுகையில் இறையச்சத்துடன் இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள்

# கலந்துரையாடல்

1. தொழுகையை முறிப்பவை பற்றி குறிப்பிடுக.
2. ஒருவரின் தொழுகை முறிந்துவிட்டால் அவர் என்ன செய்ய வேண்டும்.?
3. பின்வரும் சந்தர்ப்பங்களில் தொழுகையை முறிப்பவை எவை என்பதை அடையாளம் காணுக.

அ. ஸைத் தொழுதுகொண்டிருக்கும் போது தனது தம்பி அனஸ் தனது கலர் பெட்டியை எடுப்பதைக் கண்டான். அப்போது, "எனது கலர் பெட்டியைக் கொடு" என ஸைத் கத்திவிட்டான்.

ஆ. ஸைத் தனது அறையில் தொழுதுகொண்டிருக்கும் போது, வீட்டின் கதவு மணி அடிக்கும் சப்தத்தைக் கேட்டான். உடனே சென்று கதவைத் திறந்துவிட்டு வந்து, விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொழுதான்.

இ. உமர் தொழுதுகொண்டிருக்கும் தனது சிறய தம்பி தவழ்ந்து சென்று விழுவதைக் கண்டு சிரித்துவிட்டான்.

## ஆசிரியருக்கு

- தொழுகையை முறிக்கும் விடயங்களை மாணவர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்தி, அவர்களிடம் இருக்கும் சந்தேகங்களுக்கான விளக்கத்தை வழங்கவும்.
- தொழுகையில் இறையச்சத்துடன் இருக்க வேண்டுமென மாணவர்களை பணிக்கவும்.
- சில மாணவர்களைத் தேர்வு செய்து, தமது சக நண்பர்களுக்கு சரியாக தொழுது காண்பிக்க வைக்கவும். அவர்கள் விடும் பிழைகளை சரிசெய்யவும். இதன் போது மாணவர்களின் ஒவ்வொரு அசைவையும் அவதானிக்கவும்.
- வுழூவை முறிக்கும் காரியங்கள் உறுதியாக நிகழ்ந்தால் மாத்திரமே தொழுகை முறியும் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
- வேண்டுமென்று கதைப்பது தொழுகையை முறித்துவிடும் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.